Puducherry/Regional Bulletin/Tamil/18.10hrs/07.04.2024/Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 07.04.2024 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பீகாரில் உள்ள நவாடாவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பேரணியில் பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, பங்கேற்று உரையாற்றினார்.

மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான அரசு நாட்டின் அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க முயற்சித்து வருவதாக காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

சுவிதா போர்ட்டலில், தேர்தல் தேதி அறிவித்த 20 நாட்களில் தேர்தல் ஏற்பாடு தொடர்பான அனுமதிகளை வழங்குவதற்காக 73 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தேர்தல் ஆணையம் பெற்றுள்ளது.

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

*மோடி-1 (16)*

நாடு முழுவதும், 102 மக்களவைத் தொகுதிகளுக்கு வரும் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள், தங்களது வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, இன்று பீகாரில் உள்ள நவாடாவில், தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார். இண்டியா கூட்டணிக்கு தெளிவான தொலைநோக்குப் பார்வையும், நம்பகத்தன்மையும் இல்லை என்றும், அவர்களிடையே உட்கட்சிப் பூசல் வெளிப்படையாக உள்ளது என்றும் தெரிவித்தார்.

காங்கிரஸ் – RJD மற்றும் பிற கட்சிகள் நாடு முழுவதும், அரசியலமைப்பை ஒரே மாதிரியாக அமல்படுத்த விரும்பாததால், நாட்டை சிதைக்க விரும்புவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை திருப்திப்படுத்தும் ஆவணம் என்றும், திரு. மோடி குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டுகால தனது ஆட்சியின் பணிகள் சட்டப்பிரிவு 370 மற்றும் முத்தலாக் ரத்து செய்யப்பட்டதற்கான உத்தரவாதங்களின் சாட்சியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

500 ஆண்டுகளுக்குப் பிறகு ராமர் கோவில் கட்டி முடிக்கப்பட்டதால், மக்களின் நீண்டகால கனவு நிறைவேறி இருப்பதாகவும், ஆனால் காங்கிரஸ் எப்போதும் அதை எதிர்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். நிகழ்ச்சியில் பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சித் தலைவர்களும் இதில் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில், பாஜக தலைவர்களுடன் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிற கட்சி உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

தொடர்ந்து, இன்று மதியம் ஜல்பைகுரியின் துப்குரி தொகுதியில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்திலும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பங்கேற்று உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, பிரதமர் இன்று மத்தியபிரதேச மாநிலம், ஜபல்பூரில் இன்று மாலை நடைபெறும், பேரணியிலும் பங்கேற்க உள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, நாளை மாலை மகாராஷ்டிரா மாநிலம் ஷந்த்ராபூர் மற்றும் கட்சிரோலிக் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்ல உள்ளார். அங்கு, அத்தொகுதியில் போட்டியிடும் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இக்கூட்டத்தில், பாஜக மூத்த தலைவர்கள் மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள மகாநிதி கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

***மோடி-3 (14)***

இதனிடையே ராம்டெக் மக்களவைத் தொகுதியில் உள்ள கன்ஹாம் பகுதியில் பிரதமர் இம்மாதம் 10ஆம் தேதி பாஜக வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் செய்ய உள்ளார். மகாராஷ்டிராவில் உள்ள கிழக்கு விதர்பாவின் நாக்பூர், ராம்டெக், ஷந்த்ராபூர்,கட்சிரோலி-சிமூர், பண்டாரா-கோண்டியா, உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு வரும் 19ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு.ராகுல்காந்தி, தமது கட்சியின் தேர்தல் அறிக்கை பொதுமக்களை கலந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதனிடையே அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் என்று கூறினார்.

தபால் ஓட்டு வாக்குப் பதிவிற்கான நடைமுறைகள் இன்று தொடங்கி உள்ள நிலையில், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் சிந்தித்து வாக்களிக்குமாறு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

***சோனியா காந்தி (13)***

மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, நாட்டின் அரசியல் சாசனத்தை மாற்றி அமைக்க

முயற்சித்து வருவதாக, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி தெரிவித்துள்ளார். இராஜஸ்தான் மாநிலத்தில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பாரதீய ஜனதா கட்சியில் சேரும்படி, எதிர்கட்சித் தலைவர்கள் மிரட்டப்படுவதாகவும், நாட்டில் ஜனநாயகம் தற்போது ஆபத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். தேசிய ஜனநாயக கூட்டணி அரசின், கடந்த 10 ஆண்டுகால ஆட்சியின் விளைவாக நாட்டில் வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம், மற்றும் பொருளாதார நெருக்கடி அதிகரித்து இருப்பதுடன், சமத்துவமின்மை மற்றும் அடக்குமுறை நடவடிக்கைகள்தான் மேற்கொள்ளப்படுவதாக, அவர் குறிப்பிட்டார். எனவே மக்கள் அநீதிக்கு எதிராக போராடி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

***பிரகாஷ் கரத் (11)***

எதிர்கட்சிகளை முடக்குவதையே பாரதீய ஜனதா கட்சி முழு வேலையாக செய்து வருவதாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் அரசியல் தலைமையத்துவ உறுப்பினர் திரு. பிரகாஷ் கரத் தெரிவித்துள்ளார். மதுரை மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார். பாஜக கொள்கை ரீதியான அரசியலை கடைபிடிப்பது கிடையாது என்றும், அவர் தெரிவித்தார். எதிர்வரும் தேர்தல் இந்தியாவின் எதிர்காலத்தை மதச்சார்பற்றத் தன்மையை தீர்மானிக்கும் தேர்தல் என்றும் அவர் தெரிவித்தார். மதசார்பற்ற நாடாக இந்தியா நீடிக்குமா? என்ற கேள்விக்கும் இந்த தேர்தல் பதிலளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

***புதுச்சேரி தேர்தல் பிரச்சாரம் (16)***

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில், இண்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும், காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. வைத்திலிங்கத்தை ஆதரித்து, திமுக தலைவரும் - தமிழக முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் இன்று புதுச்சேரி சிங்கார வேலர் திடலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்ச்சியில், காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. வி. வைத்திலிங்கம், புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவருமான திரு. சிவா, திமுக உறுப்பினர்கள் திரு. எல்.சம்பத், திரு. நாஜிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதுச்சேரி தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சித் தலைவரும், முதலமைச்சருமான திரு. ரங்கசாமி, நேற்றிரவு, பாகூர் தொகுதிக்கு உட்பட்ட பாகூர், சின்ன ஆராய்ச்சிக்குப்பம், பரிக்கல்பட்டு, மதிகிருஷ்ணாபுரம், கொரவள்ளி மேடு, சுள்ளியாங்குப்பம், மூர்த்திக்குப்பம், மனப்பட்டு, ஆகிய பகுதிகளில் புதுச்சேரி மக்களவைத் தொகுதி வேட்பாளர் திரு. நமச்சிவாயத்தை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அவருடன் முன்னாள் அமைச்சர் திரு. தியாகராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தனவேலு, திரு. விக்ரமன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

***சுவிதா இணையதளம் (16)***

பொதுத்தேர்தல் அறிவிக்கபட்ட 20 நாட்களில் சுவிதா இணையதளத்தில் 73 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்துள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் பிரச்சார காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கட்சிகளும், வேட்பாளர்களும், வாக்காளர்களை சென்றடையும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். சுவிதா போர்ட்டல் பேரணிகளை ஏற்பாடு செய்தல், தற்காலிக கட்சி அலுவலகங்களை திறப்பது, வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் செய்தல், வீடியோ வேன்கள், ஹெலிகாப்டர்கள், வாகன அனுமதிகளைப் பெறுதல், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல் போன்றவற்றிற்கான அனுமதிகளை வழங்குகிறது.

அதிகபட்சமாக 23 ஆயிரத்திற்கும் அதிகமான கோரிக்கைகள் தமிழ்நாட்டில் இருந்தும், 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் மேற்கு வங்கத்திலிருந்தும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோரிக்கைகள் மத்தியபிரதேசத்தில் இருந்தும், பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. சுவிதா போர்ட்டல் மூலம் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், அனுமதி கோரிக்கைகளை, எங்கிருந்தும்-எந்த நேரத்திலும் ஆன் லைனில் தடையின்றி சமர்பிக்கலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி மக்களவைத் தேர்தல்-1 (18)*

புதுச்சேரி மக்களவைத் தொகுதி தேர்தலுக்கான வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலில், 26 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், தங்கள் தேர்தல் செலவினங்களை முறையாக பராமரித்து, இம்மாதம் 5,11, மற்றும் 16 ஆகிய தேதிகளில் செலவினப் பார்வையாளர்களிடம் சமர்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், தேர்தல் செலவின முதல் சரிபார்ப்புக் கூட்டம் செலவினப் பார்வையாளர்களான திரு. முகமது மன்சருல் ஹாசன், திரு. லட்சுமி காந்தா, ஆகியோர் முன்னிலையில், கடந்த 5ஆம் தேதி மாவட்ட ஆட்சியரக கருத்தரங்கு கூட்டத்தில் நடைபெற்றது.

இதில் மொத்தமுள்ள 26 வேட்பாளர்களில் 16 வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் பங்கேற்றனர். தேர்தல் செலவின கண்காணிப்புக் குழு பராமரித்து வரும் செலவின நிழற்பதிவேட்டின் கணக்குகளோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் 12 வேட்பாளர்களின் கணக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 3 வேட்பாளர்களின் தேர்தல் கணக்குகள் மாறுபட்டுள்ளதால், விளக்கம் கோரப்பட்டுள்ளது. மேலும் செலவின கணக்குகளை சமர்பிக்காமல் கூட்டத்தில் மட்டும் கலந்து கொண்ட ஒரு வேட்பாளருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

***புதுச்சேரி மக்களவைத் தேர்தல் -2 (3)***

இது தவிர கூட்டத்தில் கலந்து கொள்ளாத, மற்றும் தேர்தல் கணக்குகளை சமர்பிக்காத 10 வேட்பாளர்களுக்கு 48 மணி நேரத்திற்குள் தங்களது விளக்கத்தை அளிக்குமாறு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

***உலக சுகாதார தினம் (6)***

உலக சுகாதார விழிப்புணர்வு, உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, மத்திய-மாநில அரசுகள், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றன. உலக சுகாதார அமைப்பு இந்த ஆண்டின் கருப்பொருளாக **எனது ஆரோக்கியம் – எனது உரிமை** என அறிவித்துள்ளது. உலக சுகாதார தினம் முதன்முதலில் 1950ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பால் கொண்டாடப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

***வாக்கு மையங்கள் -1 (16)***

புதுச்சேரி மக்களவைத் தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்குப்பதிவு வருகிற 19ஆம் தேதி நடைபெற உள்ளது. புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப் பரப்பில் மொத்தம் 967 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடிகளில் சுமார் 2 ஆயிரத்து 880 வாக்கு எந்திரங்கள் மற்றும் ஆயிரத்து 486 விவிபாட் எந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவதற்காக 7 ஆயிரத்து 94 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வரும் மக்களவைத் தேர்தலின்போது, வாக்குப்பதிவு விழுக்காட்டினை உடனுக்குடன் நிகழ்நேர கண்காணிப்பு முறையில் பதிவு செய்வதற்காக வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடத்தப்படும் பயிற்சி முகாமை புதுச்சேரி மாநில தேர்தல் நடத்தும் அதிகாரி திரு. குலோத்துங்கன் இன்று ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், இம்மையங்கள் வாணப்பேட்டையில் உள்ள அமலோற்பவம் பள்ளி, லாஸ்பேட்டையில் உள்ள மகளிர் அரசு பொறியியல் கல்லூரி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களுக்கு நேரில் சென்ற அவர், இப்பயிற்சியை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், தங்களுக்கு ஏற்படும்

சந்தேகங்களை விளக்கமாக கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்றும் வாக்குப்பதிவு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும் மருத்துவ காரணங்களைக் காட்டி வாக்குப்பதிவு பணியில் இருந்து விலக்குக் கோரியவர்களின் விண்ணப்பங்கள் மருத்துவ ஆய்விற்கு பரிந்துரை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். விண்ணப்பதாரர்களின் உடல் ஆரோக்கிய நிலை குறித்து, மருத்துவ ஆய்வுக்குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் அவர்கள் தங்களது அன்றாட அலுவல் பணிக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார். விண்ணப்பங்கள் உண்மைக்கு புறம்பானவை என மருத்துவ ஆய்வுக் குழு கண்டறிந்தால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

***தேர்தல் விழிப்புணர்வு (11)***

மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவிற்கு இன்னும் 12 நாட்களே எஞ்சியுள்ள நிலையில், புதுச்சேரி மாநில தேர்தல் துறை சார்பில் வரும் மக்களவைத் தேர்தலில், 100 சதவிகித வாக்குப்பதிவு, நேர்மையான வாக்குப்பதிவு உள்ளிட்டவைகளுக்காக, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அந்த வகையில், நேற்று மாலை புதுச்சேரி கடற்கரைச் சாலையில், ஸ்கேட்டிங் மற்றும் தப்பாட்டம் மூலமாக வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில், ஸ்கேட்டிங் வீரர்கள், ஸ்கேட்டிங் செய்து கொண்டே பொதுமக்களுக்கு தேர்தல் துறையின் சார்பில் வழங்கப்பட்ட கையேடுகளை வழங்கினர். மேலும், விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடியும் சென்றனர்.

***ஐபிஎல் (3)***

ஐபில் கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி, டெல்லி கேபிடல்ஸ் அணியை மும்பையிலும், லக்னோ சூப்பர் ஜெயிண்ட்ஸ் அணி இன்று மாலை லக்னோவில் குஜராத் டைடன்ஸ் அணியையும் எதிர்கொள்கிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பீகாரில் உள்ள நவாடாவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பேரணியில் பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, பங்கேற்று உரையாற்றினார்.

மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான அரசு நாட்டின் அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க முயற்சித்து வருவதாக காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திருமதி. சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

சுவிதா போர்ட்டலில், தேர்தல் தேதி அறிவித்த 20 நாட்களில் தேர்தல் ஏற்பாடு தொடர்பான அனுமதிகளை வழங்குவதற்காக 73 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை தேர்தல் ஆணையம் பெற்றுள்ளது.

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM / NV / RK**